*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*22 06 2026 MONADAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *லக்னோவில் மூன்று மாடி வணிக வளாகத்தில் நேரிட்ட தீ விபத்தில் 14 மாணவர்கள் உயிரிழந்தனர்.*
- *அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதாக சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
- *இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*
- *இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer, தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*
- *உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*>>>>><<<<*

*உத்தரபிரதேசத்தின், லக்னோவில் நேரிட்ட தீ விபத்தில் 14 மாணவர்கள் உயிரிழந்தனர்.*

*Aliganj பகுதியில் உள்ள பயிற்சி மையத்தில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. Brijesh Pathak கூறியுள்ளார்.*

*விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உயிரிழந்த மாணவர்கள் 16 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவித்தார்.*

*அந்த வளாகத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.*

*அனிமேஷன் பயிற்சி மையத்தில் நேரிட்ட தீ விபத்து வளாகம் முழுவதும் பரவியதாக திரு. Brijesh Pathak தெரிவித்தார்.*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததோடு, தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவியையும் அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தள்ளார்.

இதற்கிடையே, விபத்து நடந்த இடத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் சற்றுமுன் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாணவர்களை சந்தித்த முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

>>>>><<<<

அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதாக சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன் ராம் மெக்வால் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

நீதித்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்த கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

டிஜிட்டல் கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு இது பெரிதும் உதவிகரமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமை இயக்குநர் திரு. *Amir Baram* தம்மை புதுதில்லியில் சந்தித்து பேசியபோது இதனை தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<

மங்கோலிய வெளியுறவு அமைச்சர் திருமதி. *Battsetseg Batmunkh*-குடன் நடத்திய பேச்சுகள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அந்நாட்டிற்கு சென்றுள்ள அவர். உலன்பட்டாரில் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

கலாச்சாரம், கல்வி. பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டாக அவர் கூறியுள்ளார்.

சுரங்கத்துறை, தூய எரிசக்தி பயன்பாடு மற்றும் வேளாண் பதப்படுத்தும் துறையில் புதிய வாய்ப்புகளை கண்டறிதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

நாட்டின் வளர்ச்சியில் மத்திய தொழிலக பாதுகாப்பு படை முக்கியப் பங்கு வகிப்பதாக உள்துறை இணையமைச்சர் திரு. *Bandi Sanjay Kumar* கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்தப் படையின் புதிய தலைமையகத்திற்கான கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்தப் படை வீரர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வசதி இவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் திரு. *Bandi Sanjay Kumar* தெரிவித்தார்.

>>>>><<<<

தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நாடுமுழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு டிஜிட்டல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

டிஜிட்டல் இந்தியா இயக்கம் காரணமாக, இணையதள இணைப்பு பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 122 கோடியாக அதிகரித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<

ஆதார் செயலியை பதிவிறக்கம் செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 3 கோடியை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த செயலியை, குறுகிய காலத்திற்குள் 3 கோடியே 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவிறக்கம் செய்துள்ளதாக தகவல் தொழில்நுட்பத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த செயலி வாயிலாக 40 லட்சம் பேர் தங்களது கைபேசி எண்ணின் மாற்றத்தை பதிவு செய்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த செயலி வாயிலாக முகவரி மாற்றங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

கிழக்கு கடற்கரை ரயில்வே வழித்தடத்தில் விபத்துகளை தவிர்க்கும் நோக்கில் கவாச் தொழில்நுட்பம் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

*Baghuapal – Budhapank, Haridaspur – Paradeep, Khurda Road – Balangir, Naupada – Gunupur, Lanjigarh Road – Junagarh, Bobbilli – Salur* ஆகிய வழித்தடங்களில் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ரயில் விபத்துகளை தவிர்க்கும் வகையில், இந்த தானியங்கி பாதுகாப்பு தொழில்நுட்பம் செயல்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<

மேற்குவங்கத்தின் வரி வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில நிதியமைச்சர் திரு. *Swapan Dasgupta* கூறியுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்து அவர் பேசினார்.

வரி செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எல்லை பாதுகாப்பு படையினருக்கு தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக திரு. *Swapan Dasgupta* அறிவித்தார்.

>>>>><<<<

பஞ்சாபில், தனியார் பள்ளிகளில் கட்டணங்களை முறைப்படுத்துவதற்கு வகை செய்யும் அவசர சட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சண்டிகரில் முதலமைச்சர் திரு. பகவத் மான் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மாணவர்களின் நலனை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<

தில்லியில் தீ விபத்து ஏற்படுவதை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறினார்.

மாள்வியா நகர் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகளை புதுதில்லியில் வழங்கி அவர் பேசினார்.

*Saidulajab* கட்டிட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் உரிய நிவாரண உதவிகளை அவர் வழங்கினார்.

இந்த இரண்டு விபத்துக்கும் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>><<<<

ஆந்திராவில் உள்ள 700 பழமையான கோவில்கள், 800 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படவுள்ளதாக அம்மாநில அமைச்சர் திரு. *Ram Narayan Reddy* கூறியுள்ளார்.

அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று கூறினார்.

>>>>><<<<

இங்கிலாந்து பிரதமர் திரு. *Keir Starmer*, தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில். மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தாம் அரசியலில் அடியெடுத்து வைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்தும் தாம் விலகுவதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பதவியில் தொடரவுள்ளதாகவும் திரு. *Keir Starmer* கூறியுள்ளார்.

>>>>><<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

>>>>><<<<

உலக ராணுவ வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியின் *Warendorf*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் பாரா ஆடவர் வில்வித்தை பிரிவில் *Rajbir Singh* தங்கப்பதக்கத்தையும், *Suraj Singh* வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் *Suraj Singh - Venkatadri Kunderu* இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>END<<<<